## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
### வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
### (18.02.2023 முதல் 22.02.2023 )

**அறிக்கைஎண் 014/2023** **தேதி.17.02.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 23°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 26°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 07°செ முதல் 08°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் மழை பெறப்படவில்லை.

**திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 14.02.23 முதல் 16.02.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 18°செ முதல் 19°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 61 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 21 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 11-14 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (14.02.2023 முதல் 17.02.2023) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 22.02.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14/01 | 15/02 | 16/02 | தேதி | நாள்-1 18/02 | நாள்-2 19/02 | நாள்-3 20/02 | நாள்-4 21/02 | நாள்-5 22/02 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 34 | 33 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 34 | 34 | 35 | 35 |
| 18 | 19 | 19 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 19 | 19 | 20 | 20 | 20 |
| 4 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டர்) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 42 | 61 | 60 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 70 | 70 |
| 22 | 21 | 25 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 20 | 20 | 30 | 20 | 20 |
| 11 | 14 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 4 | 4 | 8 | 8 |
| 90 | 90 | 90 | காற்றுவீசும் திசை | 20 | 90 | 70 | 360 | 20 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (18.02.2023 முதல் 22.02.2023)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ

ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°செ முதல் 20°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-8 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வடகிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 18-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 19-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 20-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 21-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 22-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு தெளிவான வானம் மற்றும்வறண்ட வானிலையுடன் காற்றின் வேகம் 4 – 8 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது. வெப்பநிலை கடந்த வாரத்தினை விட கூடி வருகிறது.<br>வறண்ட வானிலை தொடர்வதால், மண் ஈரத்தினைப்பொறுத்து மாலையில் நீர் பாசனம் செய்யவேண்டும். பயிர்கழிவு மூடாக்கு இடுவதால் மண் ஈரத்தினைப் பாதுகாக்கலாம்.<br>வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை செய்த தானியங்களை காயவைத்து தக்க முறையில் சேமிக்கவும். |
| நெல் | அறுவடை | அதிகபட்ச வெப்பநிலை 34 டிகிரி செல்சியஸ் ஆக இருப்பதால் அறுவடை செய்த சம்பா நெல் மணிகளை காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும் மற்றும் மதியம் 3 மணி முதல் 5 மணி வரை உலர்த்தவும். |
| எள் | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் எள் விதைப்பினை பிப்ரவரி 15 முதல் மேற்கொள்ளலாம்.<br>கோடை கால இறவை எள் சாகுபடியில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு சேடை நீர்ப் பாசனம் செய்து எள் விதைப்பபை மேற்கொள்ளவும். |
| கரும்பு | நடவு | வறண்ட வானிலை நிலவுவதால் கரும்பில் இளங்குருத்து புழு வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி வயலை நன்கு ஈரமாக வைத்துக்கொள்வதன் மூலம் இந்த தாக்குதலை குறைக்கலாம். மேலும் பயிர் மூடாக்கு செய்வதன் மூலமும் இந்த தாக்குதல் குறைவதோடு மட்டும் அல்லாமல் நீர் தேவையையும் குறைக்கலாம். |
| வாழை | | மேற்கு வேளாண் மண்டலத்தில் வறண்ட காற்றானது 6 – 12 கி.மீ வரை வீச வாயப்புள்ளதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு போதிய முட்டுகொடுக்கவேண்டும்.<br>வாழையில் சில இடங்களில் வாடல் நோய் காணப்படுகிறது. நோய் அதிகமாக பாதித்திருந்த மரத்தை அகற்றி விட்டு சுண்ணாம்பு இடவும். மேலும் வாழைத்தண்டு 45 டிகிரி கோணத்தில் 10 செ.மீ துளை எடுத்து அதில் 60 மி.கிராம் கார்பன்டசிம் மாத்திரை அல்லது கார்பன்டசிம் 2 சத நீரை 3 மில்லி அல்லது 50 மில்லி கிராம் சூடோமோனாஸ் |

| | | |
|---|---|---|
| | | ப்ளோரோசென்ஸ் உயிர் பூஞ்சான கொல்லியை கொண்டு நிரப்பவும். இந்த முறையை 2, 4 மற்றும் 6 வது மாதங்களில் செய்யவும். கரும்பு ஆலை கழிவு ஒரு மரத்திற்கு 5 கிலோ இடுவது தாக்குதலை குறைக்கும். |

| | | |
|---|---|---|
| மா | பூக்கும் பருவம் | நிலவும் வறண்ட வானிலையில், மண்ணில் ஈரப்பதம் இருக்கும் பொழுது பூ வராத மா மரங்களுக்கு பூக்களின் உற்பத்தியை தூண்டுவதற்கு 0.5 சதவீதம் யூரியா (5 கிராம்/லிட்டர்) அல்லது 1 சதவீதம் (10 கிராம்/லிட்டர்) பொட்டாசியம் நைட்ரேட் கரைசலை கொண்டு தெளிக்கவும்.<br>மண்ணில் ஈரப்பதம் இருக்கும் பொழுது மா மரங்களில் பூக்கள் உதிராமல் இருக்கவும் மற்றும் அதிக காய்கள் பிடிக்கவும், 2 சதவீதம் பொட்டாசியம் நைட்ரேட் கரைசலை தெளிக்கவும். |
| கொடி வகை காய்கறி | பூக்கும் பருவம் | பெண் பூக்களை அதிகரிக்க கொடி வகை காய்கறி பயிரில் எத்ரல் 100 பிபிஎம் அதாவது 10 லிட்டர் தண்ணீரில் 1மில்லி கலந்து 15 நாட்கள் இடைவெளியில் நான்கு அல்லது ஐந்து முறை நிலத்தில் போதுமான ஈரம் இருக்கும் பட்டத்தில் தெளிக்கவும். |
| கால்நடைகள் | | வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு சுத்தமான குடிநீரை போதுமான அளவு கால்நடை மற்றும் கோழிகளுக்கு கொடுக்கவும்.<br>தற்போது நிலவும் வானிலையால் ராணிகட் நோய் குறிப்பாக வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு இந்நோய் வர வாய்ப்புள்ளது. எனவே அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவ மனைகளில் தகுந்த தடுப்பூசி போட்டுக் கொள்ளவும்.<br>பகல் வெப்பநிலை மற்றும் காலை நேரக் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதாலும் கால்நடைகளுக்கு வரக்கூடிய சப்பை நோயைக் கட்டுப்படுத்த கிராம கால்நடை மருத்துவரை உடன் அணுகவும். |

## குறுஞ்செய்தி

- நிலவும் வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு அறுவடை செய்த மஞ்சள் கிழங்கினை பதப்படுத்தி சந்தைப்படுத்தவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**